# நாம தேவரும் ஞான தேவரும்



டாக்டர் நா. சோமாஸ்கந்தக்குருக்கள்

# நாம தேவரும்
# ஞான தேவரும்

டாக்டர் நா. சோமாஸ்கந்தக்குருக்கள்
திருமண பதிவாளர். அவுஸ்திரேலியா

வெளியீடு
மாடர்ண் இந்துக் கல்சரல் ஆர்ட்ஸ் வேர்க்

**MODERN HINDU CULTURAL ARTS WORK**
**AUSTRALIA**
**2001**

# நூல் பற்றிய விபரங்கள்

நூலின் பெயர் :

நாம தேவரும் ஞான தேவரும்

பதிப்பு :

இரண்டாம் பதிப்பு

பக்கங்கள் :

32 பக்கங்கள்

அச்சிட்ட நூல் எண்ணிக்கை :

500 நூல்கள்

வெளியீடு :

மாடர்ண் இந்துக் கல்சரல் ஆர்ட்ஸ் வேர்க்
MODERN HINDU CULTURAL ARTS WORK

அச்சுப்பதிப்பு :

யுனி ஆட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
கொழும்பு - 13

# பொருளடக்கம்

(1) நாமதேவரும் ஞான தேவரும் ..........................

பாதாள லோகத்தில் கண்ட காட்சி

நாமதேவர் தரிசனம்

(2) சாங்க தேவரும் ஞான தேவரும் ..........................

தேவரின் அற்புதங்கள்

மாதவரும் – யாதவரும்

நாயும் லிங்கமும்

இறந்தவள் பிழைத்த அதிசயம்

(3) ஸ்ரீ நாராயண கவசம் ..........................

# ஆசிரியரின் உரை



இறைவனை பக்தி செய்து அருள் பெற்ற மகான்கள் ஏராளம் ஏராளம். நமது சமயத்தில் நாயன்மார்கள், ஆழ்வார்கள் மட்டுமின்றி அருளாளர்கள் எத்தனையோ பேர் ஆர்ப்பாட்டம் எதுவுமின்றித் தமது சக்திகளையும் சித்துக்களையும் வெளிக்காட்டாது வாழ்ந்திருந்தனர். ஆனால், தெய்வத்தையோ அல்லது மகான் களையோ தூஷிப்பவர்களை, அவநம்பிக்கை கொண்ட அஞ்ஞானிகளைத் திருத்துவதற்கும், நல்வழிப்படுத்துவதற்கும் தமது சக்திகளையும், தவ ஆற்றல்களையும் வெளிக்காட்டிச் சித்துக்கள் புரிந்திருக்கின்றார்கள் என்பதை அவர்களது வரலாற்றில் காணமுடிகின்றது. தற்காலத்தில் வானொலி, தொலைக்காட்சி, ஒலி, ஒளிப்பதிவு நாடாக்கள் புதினப் பத்திரிகைகள் மூலம் ஒரு சில மாகான்களின் சிற்சில அற்புதச் சித்துக்களை அறிந்து அனைத்துலகமும் அவர்களைத் தெய்வம் என மதித்து போற்றி வணங்கி அதிசயப்பட்டு நிற்பதை அறிகின்றோம். இது போல் ஆயிரமாயிரம் அற்புதங்களை இறையருளால் காலத்துக்குக் காலம் நிகழ்த்தி வந்த ஞானிகளாகிய நமது குரவர்களை நாம் மறந்து விடலாகாது என்பதனால் அவர்களில் ஒருசிலரை இளஞ் சமுதாயத்தினருக்கு அறிமுகப்படுத்தினால் நமது சமயத்தின் பெருமையும் தொன்மையும் உயர்வாக மதிக்கப்படும் என்னும் நோக்கால் இந்நூல் தொகுக்கப்பட்டுள்ளது. இப்பொழுது 2வது பதிப்பில் ஸ்ரீ நாராயண கவசம் என்னும் ஸ்தோத்திரம் இணைக்கப்பட்டுள்ளது. எனது பல நூல்களை வெளியிட்ட இலங்கை மொடர்ண் இந்து கல்சரல் ஆர்ட் வேர்க்ஸ் ஸ்தாபன அவுஸ்திரேலிய கிளையினர் இந்நூலையும் வெளியிட்டு இலவசமாக வழங்குகின்றனர். அவர்களுக்கும், பிழைத்தவிர்ப்பதற்கு ஒப்பு நோக்கு உதவிய மருமகன் கப்பித்தாவத்தை பிரம்மஸ்ரீ நா. சுதாகர சர்மா அவர்களுக்கும் இதனை அழகாக அச்சுப்பதித்து உதவிய யுனி ஆர்ட்ஸ் அச்சகத்தினருக்கும் நன்றியும் நல்லாசியையும் பணிவுடன் தெரிவித்து அமைகின்றேன். ராதே கிருஷ்ணா!

நன்றி
வணக்கம்

டாக்டர் நா. சோமஸ்கந்தக் குருக்கள்.
*திருமண பதிவாளர். அவுஸ்திரேலியா*

# நாம தேவரும் ஞான தேவரும்

நாமதேவர் ஒரு ஏழைக் குடும்பத்தில் பிறந்தவர் எந்தவேலையும் செய்யாது தாயாரின் சம்பாத்தியத்தில் உண்டு காலம் கழித்து வந்தார். ஆனால் சிறந்த பக்தர் என்பதனால் பெருமானின் புகழ்பாடும் பாகவதராக பொழுதைப் போக்கினார். இதனால் குடும்பத்தில் சம்பாதிப்பவர் இல்லாததினால் மிகுந்த வறுமை தாண்டவம் ஆடியது. எனவே நாமதேவரின் தாயார் மகனிடம் கூறினார்:–"மகனே! நீ இப்படி எந்த வேலையும் செய்து சம்பாதிக்காமல் இருந்தால் குடும்பத்தை எப்படி நடத்துவது? என்றதும் மகன் ஏதாவது வியாபாரம் செய்வதானாலும் பணம் வேண்டுமே. வியாபாரத்திற்குப் போடுவதற்கு முதல் தேவையல்லவா? அதற்கு என்ன செய்வது அம்மா என்றார்.

தாயார் உடனே : இவ்வூரில் வட்டிக்குப் பணம் கொடுக்கும் ஒரு மகாகஞ்சன் இருக்கின்றான். அவனிடம் கடனாக கொஞ்சம் பணம்கேட்டு வாங்கி வருகின்றேன் என்று போனார்.

அந்தக் கஞ்சனாகிய பணக்காரன் நாமதேவரின் தாயார் வட்டியும் முதலுமாக ஆறு மாதத்தில் திருப்பித்தருவதாகக் கூறியதும் அவளை நம்பி ஆயிரம் பொன் கடனாகத் தந்தான். தாயார் அதை வாங்கி வந்து மகனிடம் கொடுத்து இதை வைத்து நீ ஏதாவது தொழில் அல்லது வியாபாரம் செய்து ஆறு மாதத்தில் வட்டியுடன் முதலைத் திருப்பிக் கொடுக்க வேண்டும் என்று கூறினாள். தாயின் கட்டளைப் படியே பணத்தை வாங்கிக் கொண்டு போன நாமதேவர் என்ன தொழில் செய்வதென்று ஜோசியம் அறிந்த அந்தணரிடம் ஆலோசனை கேட்டான். அவர்கள் "உனக்கு அன்னதானம் செய்து தர்மம் பண்ணும் யோகம்தான் ஜாதகத்தில் காணப்படுகிறது" என்று கூறினார். உடனே நாமதேவர் கங்கைக் கரையில் ஓர் அன்னதான மடம் கட்டி அந்தணர்களையும் ஏழைகளையும் அழைத்துப் பெருமாளை நினைத்து அவர்களுக்குத் தினமும் வயிறார உணவு படைத்து தட்சணையும் வழங்கினான். இதைக் கேள்விப்பட்டு அயலூர்களில் இருந்து தினமும் ஆயிரக்கணக்கில் அந்தணர்கள் வந்து உணவு உண்டு போய்க் கொண்டிருந்தனர். சில நாட்களில் பெருங் கூட்டம் ஊருக்குள் வந்து போகும் காரணத்தை வட்டிக்குப் பணம் கொடுத்த உலோபி விசாரித்து அறிந்தான். உடனே அவன் வாயிலும்

வயிற்றிலும் அடித்துக் கொண்டு நாமதேவனிடம் ஓடிவந்தான். நாமதேவா இப்படி அநியாயமாக என்னிடம் வாங்கிய பொருளை இறைத்துக் கொண்டிருக்கிறாயே,இப்படி வீணாக்கினால் எனது கடனை எப்படித் திருப்பித் தரமுடியும் என்று புலம்பினான். அவன்தனது தாய் தந்தையர்களுக்கு இறந்ததினத்தில் சிரார்த்தம் செய்தாலே பணம் செலவழிந்துவிடும் என்று செய்ய மாட்டான். ஆகவே நாமதேவர் அவனிடம் சொன்னார். இங்கு வந்து இருக்கும் அந்தணர்களுக்கும் உங்கள் கையினால் (பாரிசேஷனம்)நீர் வார்த்து அன்னதானம் செய்யுங்கள். உங்கள் கடனைத் திரும்பத் தருகிறேன் என்று கூறி அந்தணர்களைப் பார்த்து "அந்தணர்களே! இந்தப் பிரபுதான் எல்லோருக்கும் பொருள் செலவிட்டு உணவு வழங்குகிறார். நீங்கள் அவரை வாழ்த்தி வணங்குங்கள்" என்று கூறினார். கஞ்சப் பிரபுவும் வேறு வழியின்றி நீர் வார்த்து அன்னம் வழங்கினான். ஆனால் எல்லோருக்கும் சொன்னான் "நான் இதுவரை தான தருமம் எதுவும் செய்தறியேன் கோவிலுக்கே போயறியேன் குளமும் எடுத்தறியேன் இது எல்லாம் நாமதேவரது வேலை தான். உங்களுக்கு பசி என்று கூறியதனால் நான் உணவளித்து நீர்வார்க்கிறேன். இதன் பலனெல்லாம் அவனுக்குத் தான் என்று கூறினான். அதனைக் கேட்டு எல்லோரும் சிரித்தார்கள் உடனே கஞ்சப்பிரபு நீ எனது கடனைத் தராவிட்டால் இங்கேயே உயிரை மாய்த்துக் கொள்வேன் என்று நாமதேவரிடம் கூறினான். நாமதேவர் நாராயணனைத் தியானிக்கவே நாராயணர் ஒரு முதியவராகத் தோன்றி அருகில் உள்ள குளத்தில் மூழ்கினால் பணம் கிடைக்கும் என்றுக் கூறும்படி அருளிச் செய்தார். இதைக் கேட்ட உலோபி ஒகோ! என்னைக் குளத்தில் தள்ளிக் கொல்லப் பார்க்கிறாயா? இதற்கு நான் சம்மதிக்க மாட்டேன் என்று கூறினாலும் பணத்தின் மேல் உள்ள பேராசையால் ஒருவாறு சம்மதித்துக் குளத்தில் இறங்கினான். குளத்தில் இறங்கியதும் அங்குள்ள சுழியினுள் அகப்பட்டு கீழுள்ள குகைக்குள் விழுந்து பாதாள லோகம் போய்ச் சேர்ந்தான்.

## பாதாள லோகத்தில் கண்ட காட்சி:

பாதாள லோகத்தில் பலவகையான நிறமுள்ள நவரத்தினங்களினால் அமைந்த ஒரு பிரகாசமான சிம்மாசனத்தில் ஒரு துருக்க ரிஷி அமர்ந்திருக்க அவரைச் சுற்றி துருக்கர் உருவில் பல சாதுக்கள் அமர்ந்திருக்கும் காட்சியைக் கண்டனர். அவர்களைப் பார்த்து வியப்பும் அருவருப்பும் கொண்டு உலோபி

திகைத்து நிற்கும் போது; அங்குள்ளவர்கள் உலோபியைப் பார்த்து "வாருங்கள்! வாருங்கள்!" உங்களை விருந்து உண்ணும் படி எம்பெருமான் அழைக்கின்றார் என்று கூறி அழைத்தார்கள். உலோபி ஆச்சரியத்துடன் பார்க்கும்போது அங்கு பலவித சுவைகளுடன் விருந்துக்காக அன்ன வகைகளும் மாமிச வகைகளும் இருக்கக் கண்டான். அவற்றைப் பார்த்தவுடன் இது என்ன கர்மம்! அங்கு பூலோகத்தில் பொருளை அவனிடம் கொடுத்து ஏமாந்து போனோம். இங்கு பாதாள லோகத்தில் நமது சாதி, சமய ஆசாரம் அனைத்தையும் இழக்கும் படியாக இருக்கின்றதே! எனப் புலம்பி இவ்வேளையில் நாமதேவனால் மட்டுமே நம்மைக் காப்பாற்ற முடியும் என எண்ணினான்.நாம தேவனை முதன் முறையாக நம்பிக்கையோடு நினைத்த மாத்திரத்தில் நாமதேவர் எதிரிற் தோன்றினார். அவர் உலோபியைப் பார்த்து "இவர் துறவுக் கோலம் பூண்ட மஹான். கூட இருப்பவர்கள் அனைவரும் அவரது சீடரான சாதுக்கள். ஆகவே நீர் இவர்களுடன் அமர்ந்து விருந்து உண்ணலாம் என்றார். அப்பொழுதும் உலோபி அதனை ஏற்காது நாமதேவரே நீர் எனது பொருளைஎல்லாம் பெற்றுக் கொண்டீர் ஒரு கடன் பத்திரம் கூட எழுதித்தரவில்லை. ஆகவே உம்மிடம் கேட்க இயலாமல் இருக்கிறேன். என்னை இவர்களிடமிருந்து விடுவித்து எனது வீட்டில் விடுவீரேல் இனி உன்னிடம் ஒன்றும் கேட்க மாட்டேன். நீர் கடனைத் திருப்பி தர வேண்டியதில்லை என்று மன்றாடினான். அதற்கு நாமதேவர் சரி! நீர் இங்கு உணவு அருந்திவிட்டு வாரும் என்றதும் உலோபி நான் உண்பதற்குரிய அரிசி,காய்கறிகளையும் அடுப்புக்கரியாகிய (எரிமுட்டை) களையும் தரச்சொல்லும் நானே சமைத்து உண்கிறேன் என்று கேட்டான். அப்போது நாமதேவன் சிரித்துக் கொண்டே அவர் விரும்பியபடியே கொடுத்தனர். அவற்றை வாங்கி கையில் வைத்துக் கொண்டு, உலோபி தன்னை இவர்களிடமிருந்து அனுப்பிவைக்கும்படி மீண்டும் நாமதேவரிடம் விண்ணப்பித்தான். உடனே நாமதேவர் சரி நீர் கண்ணை மூடிக் கொள் என்று கூறினார். மறுகணம் உலோபி பண்டரிபுரத்தில் உள்ள சந்திரபாகை என்னும் புண்ணிய தீர்த்தத்தில் எழுந்தான். கையிலிருந்த எரிமுட்டையை வீசி எறிந்து விட்டு குளத்தைவிட்டு வெளியே வந்தான். அவனுக்கு ஒரே அதிசயமாக இருந்தது. கங்கையிலே மூழ்கி பாதாளலோகம் போய்அங்கிருந்து கண்ணை மூடி பண்டரிப்புரத்தில் சந்திரப்பாகையில் எழுந்தது வரை ஒருகணம் என்கிறார்.

அரிசி காய்கறி சாமான்கள் அனைத்தும் கையில் இருப்பதைப் பார்த்தார். யாவும் கனவல்ல உண்மைதான் என்பதனையும் சிந்தித்தார். நாமதேவரின் மகிமையை இப்போதுதான் உணர்ந்தார். தனது வீட்டிற்குப் போனார். இவரைப்பார்த்ததும் மனைவி 'என்ன! கடன் வசூலித்துக் கொண்டு வந்து விட்டீர்களா?' என்று கேட்டாள். அப்போது அவரது உடையில் ஒட்டிக் கொண்டிருந்த எரிமுட்டைகளாகிய கரியை நோக்கினாள். பொன்னாக மாறியிருந்தது. இதனைக் கண்ட உலோபி நாமதேவர் சாதாரண மனிதர் அல்லர்.கடவுள் அருள் பெற்ற மஹான். நான் அவரை மதியாது அவர் கூறியதை கேளாது வாதாடி எனது விதியின் படி இந்தச் சிறிதளவு பொன்னை மட்டும் அடைந்தேன். மீதி அனைத்தும் எனது நம்பிக்கை இனத்தினாலும் கஞ்சத்தனத்தினாலும் இழந்து விட்டேன் என்று கூறினார். நாமதேவரை போற்றி துதித்தான். நாமதேவரும் நாராயனைத் துதித்து சுவாமி! எனக்காக இப்படி மிலேச்சவடிவாகி வந்தருளினீரே! உமது கருணை தான் என்னே! என்று புகழ்ந்து பாடி பண்டரிப்புரம் அடைந்தார். கங்கைக் கரையில் வாழ்ந்து வந்த கோவிந்த பண்டிதர் நிருபா தேவி என்னும் தம்பதிகளுக்கு விடோபா என்னும் ஒரு மகன் இருந்தான். இவன் வளர்ந்து, ஸ்தல யாத்திரை சென்று அழகாபதி நகரை அடைந்து அங்கு சுவாமி தரிசனம் செய்திருக்கும்போது அங்கு சித்தோ பண்டிதர் என்னும் ஒரு நாராயண பக்தர் இவனைப் பார்த்து விசாரித்து அன்று தனது வீட்டில் உணவருந்தி தங்கிச் செல்லலாம் என்று அழைத்து வந்து நன்றாக உபசரித்தார். அன்று இரவு அவரது கனவில் பகவான் தோன்றி " பண்டிதரே! உமது மகளை இவனுக்கு கன்னிகாதானம் செய்து திருமணம் புரிந்துக் கொடுப்பீராக!" என்று கட்டளையிட்டார். மறுநாள் அவரும் ஆண்டவன் கட்டளைப்படியே விடோபாவுக்கு அவரது புத்திரியை திருமணம் புரிவித்து பண்டரிநாதனை சேவித்துவிட்டு சில நாள் அங்கிருந்து தமது ஊருக்கு புறப்பட்டு சென்றான். அக்காலத்தில் பெண்கள் ருது ஆவதற்கு முன்னர் ஒன்பது வயது முதல் பன்னிரண்டு வயதுக்குள்ளேயே கன்னிகாதானம் செய்வது வழக்கம். அந்தப் பருவமே கன்னிப் பருவமாகும். கன்னிப் பெண் பருவமடைந்ததும் கன்னி கழியச் செய்வதுதான் ருது சாந்தியாகும். "பிரதம ருதுசாந்தி" என்னும் வைபவத்தைக் கணவனது பெற்றோர்தான் மாமன் மாமியர் ஸ்தானத்தில் முன்னின்று நடாத்தி மாப்பிள்ளையிடம் சேர்ப்பித்துச்

சாந்திமுகூர்த்தம் நடத்துவது வழக்கம். இக்காலத்தில் விவாகமாகுமுன் ருதுவாகுவதனால் தாய்மாமன் அல்லது மாமியும் முன்னின்று நடாத்துவதைக் காணலாம்.

அதன்படி விவாகம் செய்த பின் மனைவியை மாமனார் வீட்டிலேயே விட்டுத் தனியாக ஊர் திரும்பிய விடோபா– தனது பெற்றோர் காலமாகியதையறிந்து அதற்குரிய கடமைகளை நிறைவேற்றிவிட்டு மாமனார் வீடு சென்று மனைவியிடம்தான் "சந்நியாசம்" வாங்கித் துறவுநிலை பூண்டு தவமியற்றப் போக விரும்புவதாகவும் அதற்கு அவள்விடைதர வேண்டும் என்றும் கேட்டான். இளம்பெண்ணாகிய அவள் அதற்குச் சம்மதிக்கவில்லை. அவர் மறுத்ததினால் காசிக்குப் போய் கங்காதீர்த்தமாடி வருவதாக சமாதானங் கூறிவிட்டு காசிக்குப் போய் ஸ்ரீபாதர் என்பவரிடம் சந்நியாசம், தீட்சை பெற்றிருந்தான்.

இவ்வாறிருக்க மனைவி பருவமெய்தி தனக்கு வாய்த்த கணவன் சந்நியாசம் பெற்றதையறிந்து ஸ்ரீபாதர் வருகின்ற சேதியறிந்து அவர் வரும் வழியில் அரசமரத்தைப் பிரதட்சிணம் செய்து கொண்டிருந்தாள். ஸ்ரீ பாதர் அருகில் வந்ததும் அவரைச் சேவித்தாள். அவர் உனக்கு நான்கு புத்திரர்கள் உண்டாகுக! என்று ஆசிர்வதித்தார். அவள் அதைக் கேட்டுச் சிரித்தாள். உடனே ஸ்ரீபாதர் ஏன் சிரிக்கிறாய்? என்று அவரிடம் கேட்க, அவர்! சுவாமி தாங்கள் தான் என்று கணவனாகிய விசோபாவுக்கு சந்நியாசம் வழங்கி விட்டீர்கள். பின் எப்படி தங்கள் வாக்குப் பலிக்கப்போகிறது என்று எண்ணிச்சிரித்தேன் என்று கூறினாள். அப்போது ஸ்ரீபாதர் அவளைக் கவலைப்படாதே! என்று கூறி தம்முடன் காசிக்கு அழைத்துச் சென்று விசோபாவிடம் அவளை ஒப்படைத்து நீ இளம் மனைவியின் ஒப்புதல் பெறாது என்னிடம் சந்நியாசம் பெற்றதும், நான் உனக்கு வழங்கியதும் தவறு. நீ சிறிதுகாலம் இவருடன் இல்லறம் நடத்து என அவர்கள் போய் வாழுங்காலத்தில் மூன்று ஆண்குழந்தைகளும் ஒரு பெண் குழந்தையும் ஸ்ரீபாதர் அவர்களின் திருவாக்கின் படியே பிறந்தன. பெரியோர்களின் வாக்கு தப்பாதல்லவா? ஆண்களில் முதல்வன் பெயர் நிவர்த்தி, இரண்டாவது ஞான தேவன், மூன்றாவது சோபானன் ஆவர். பெண் குழந்தையின் பெயர் முத்தாயி ஆகும். தந்தை மீண்டும் சந்நியாசம் சென்றுவிடவே தாயானவள்

குழந்தைகளை வளர்த்து வந்தாள். சிறுவர்கள் பூநூல் தரிக்கும் பருவமாகிய 6, 7, 8 வயதுகளை அடைந்தவுடன் அவர்களுக்கு உபநயனச்சடங்கு செய்து வைக்கும்படி ஊரிலுள்ள (வைதீக வாத்தியார்) வேதியரைக் கூப்பிடும்போது அவர்கள் ஏளனமான இவளைப் பரிகசித்து, கணவன் துறவியாகப் போனது, பின்பு இவள் மறுபடியும் அவனைச் சேர்ந்து குழந்தை பெற்றது இப்போது தந்தையின்றி வாழும் பிள்ளைகளுக்கு பூநூல் போடுவது எப்படி? என்பது போன்ற பல கேலி வார்த்தைகளைக் கூறி அவமரியாதை செய்தனர். அவர்களில் ஒரு அந்தணர் இவர்களுக்கு – ஞான தேவன் என்று பெயர் இருப்பதனால் ஞானம் பெறக் கூடியவன் என்பது அர்த்தமாகுமா? இதோ ஒரு எருமைக்கடா வருகின்றது.இதற்கு ஞானன் என்று பெயரிட்டால் உடனே அதற்கு பிரும ஞானம் வந்து விடுமா? சொல் பார்ப்போம் என்று பரிகசித்தார். தனது தாயையும் சகோதரர்களையும் பரிகாசம் செய்வதைப் பார்த்து ஞான தேவன் சொன்னான். ஆம் அந்தணர்களே அவர்கள் கூறியது முற்றிலும் சரிதான். இந்தக்கடாவுக்கு உரியதும் எனக்குரியதும் சரிசமம் தான் என்று கூறினான். உடனே கையில் கோல் வைத்திருந்த ஒரு அந்தணர் அந்த கடா மாட்டின் முதுகில் தடியினால் ஒரு அடி அடித்ததும் ஞானதேவனது முதுகில் தடித்து வீக்கம் உண்டாகியது. உடனே பயங் கொண்ட அந்தஅந்தணர் இந்த மாட்டுக்கு, வேத சாத்திர ஞானம் உண்டாகுமா? அப்படி நீ உறுதிப்படுத்துவாயா? என்று ஞானத்தேவனைப் பார்த்துக்கேட்க, எல்லா அந்தணர்களும் உரக்கச் சிரித்து கை கொட்டினர். உடனே ஞானதேவர் இதோபாருங்கள் இந்தக் கடாவுக்கு நீங்கள் அறிந்த நால் வேதமும் நன்றாகத் தெரியும் என்று கூறி தனது கையை மாட்டின் தலையில் வைத்தார். உடனே அந்தக் காளைமாடு ஞானம் உண்டாகி அந்தணரின் குரலில் இருக்கு, யசுர், சாமம், அதர்வனம் ஆகிய நான்கு வேதங்களையும் ஓதத் தொடங்கியது. இதனைக்கேட்டு அந்தணர்கள் பயந்து ஓடி ஒளிந்தனர். பின்பு அவர்களிலே ஒரு முதிய அந்தணர் இவர்களது மகிமையை உணர்ந்து தனது வீட்டில் தங்க வைத்து சகல வேத மந்திரங்களையும் கற்றுத் தந்தார்.

இவ்வாறிருக்கையில் ஒருநாள் குருவினுடைய தந்தைக்கு சிராத்த திதி வந்தது. அன்று சிராத்த போஜனம் உண்பதற்காக அந்தணர்களை அழைத்தனர். அப்போது அவர்கள்! நீ ஒரு ஆசாரம் ஒழுக்கங்களில்லாத

வர்களுக்கு உபநயனம் செய்து வேத பாடம் நடத்துகின்றாய். ஆகவே உமது வீட்டில் நாம் வந்து சிராத்தத்திற்கு உணவு அருந்த மாட்டோம் என்று புறக்கணித்தார்கள். அதுகேட்ட மாணவன் ஞானதேவன் குருவைப்பார்த்து சுவாமி! அவர்கள் வராவிட்டால் பரவாயில்லை. நீங்கள் சிராத்தத்திற்கு வேண்டிய சமையலை விதிப்படி முடியுங்கள். பிதிரர்களே வந்து ஏற்பார்கள். என்றான். அதை அந்தணக்குரு அதன்படியே சமைத்து – விஸ்வ தேவர்கள் – பிதிரர்களே ஆகியோருக்குத் தனித்தனியே தலைவாழையிலை போட்டு எல்லாவிதமான கறிவகைகளுடன் அன்னம் பட்சணங்கள் பழங்கள் யாவும் படைத்துத் தத்தம் செய்யும் வேளை வந்துங்கூட பிதிர் தேவர்கள் வராதது கண்டு கவலையுடன் ஞான தேவனைப் பார்த்தான். உடனே ஞானதேவன் கடவுளைத் தியானித்து தேவ பிதிர்களையெண்ணி அட்சதை எள் முதலானவற்றைத் தூவினான். உடனே அனைத்து இலைகளிலுமுள்ள அன்னபட்சனங்கள் முழுவதையும் பிதிரர்கள் ஏற்றுக் கொண்டார்கள். அனைத்தும் மாயமாக மறைந்ததும் அந்தணன் ஆச்சரியத்துடன் மன மகிழ்ந்தான். சிராத்தத்தில் போக்தாவாக அமர்ந்து உண்பதற்கு வர மறுத்த அந்தணர்கள் இவற்றையெல்லாம் ஜன்னல் வழியாக பார்த்த வண்ணம் நின்றிருந்தார்கள். அவர்கள் அனைவரும் ஞானதேவனும் சகோதரர்களும் சாதாரண மனிதர்களை தெய்வ சக்தி படைத்தவர்கள் என அறிந்து ஓடோடி வந்து வணங்கித் தொழுதார்கள்.

அதன் பின்பு நிவர்த்தி, ஞானதேவன், சோபனன், முத்தாயி ஆகிய நால்வரும் அவ்வூரை விட்டு தமது ஊரை நோக்கிப்புறப்பட்டுச் சொன்னார்கள். அந்த ஊரில் அனைவரும் அன்போடு இவர்களை வரவேற்றனர். நிவர்த்தி என்னும் அண்ணன் தனது தங்கை முத்தாயிடம் அப்பம் சுட்டுத் தருமாறு கேட்டான். முத்தாயி மாவைக் குழைத்து தயார் செய்து விட்டு அப்பம் சுடுவதற்கு ஏற்ற மண்பாண்டம் இல்லாததினால் அவ்வூரிலுள்ள பானைசட்டி செய்யும் குயவனிடம் சென்று மண்சட்டி கேட்டாள். அப்போது விசோபன் என்பவன் குயவனிடம் சென்று இவர்களுக்கு பாண்டம் எதுவும் கொடுக்கக் கூடாது என்று தடுத்து விட்டான். இதனை அறிந்த அண்ணனாகிய நிவிர்த்தி தங்கையைப்பார்த்து கவலைப்படாதே! இதுவும் பாண்டந்தானே! எனது முதுகிலே அப்பம் சுடுவாயாக என்று கூறி நெருப்பின் மீது தவழ்ந்து நின்றான்.

அவரும் முதுகிலே அப்பச் சுட்டாள். இந்த அற்புதச் செயலைக் கண்ட அனைவரும் வியந்தனர். நிவிர்த்தியும் சகோதரர்களும் அப்பம் சாப்பிட்டுக் கொண்டிருக்கையில் விசோனன் ஓடோடி வந்து பணிந்து அவர்களது எச்சில் அப்பத்தை தான் வாங்கி பக்தியுடன் உண்டு திருவருள் பெற்றான்.

## நாமதேவர் தரிசனம்

இவ்வாறிருக்கையில் ஒருநாள் மகான் நாமதேவர் பண்டரிபுரத்துப் பெருமாளை வழக்கம்போல தரிசனம் செய்துவிட்டு,அவ்வழியே வந்தார். அதைக் கண்ட ஞான தேவன் சுவாமி! தங்களுடன் சென்று புண்ணிய தீர்த்தங்களாடுவதற்கு விரும்புகிறேன். தாங்கள் தீர்த்த யாத்திரைக்கு என்னை அழைத்துச் செல்ல வேண்டும் என விண்ணப்பம் செய்தார். அதற்கு நாமதேவர் அது என்னாலாகாத காரியம் பெருமாளை விட்டு நான் பிரிந்து வர மாட்டேன். அவர் உத்தரவு கொடுத்தால் தான் நடக்கும் என்றார். உடனே ஞானதேவன் பெருமானைத்தியானம் செய்தான். பெருமான் நாமதேவருக்குக்காட்சி கொடுத்து நானும் உம்முடன் வருகிறேன். ஞானதேவனை அழைத்து வரும் என்று கூறி தானே வழிகாட்டியாக முன் செல்ல பின்னே நாம தேவரும் ஞான தேவருமாக திர்த்த யாத்திரை செய்தனர். இடையில் பெருமாள் அவர்களை செல்ல விடுத்து தனது ஆலயத்திற்கு வந்ததும் இதுவரை எதிர்பார்த்திருந்து மகாலட்சுமித்தேவி! சுவாமி தாங்கள் காலில் இவ்வளவு புழுதி படியும் வண்ணம் கால் நடையாக எங்கு சென்று வருகிறீர்கள்? என்று கேட்டார். அதற்கு பெருமாள்! எனது பக்தன் நாமதேவன் எனது உத்தரவுப்படி எனது இன்னொரு பக்தனாகிய ஞான தேவனைத் தீர்த்தங்களாட அழைத்துச் சென்றுள்ளான். நாமதேவனைப் பிரிய மனமில்லாமல் நானும் அவர்களுடன் நடந்து சென்று வழியனுப்பி வந்தேன். அவனைப் பிரிந்த சோகம் என்னை வாட்டுகின்றது என்று விசனத்துடன் கூறியருளினார். பக்தனிடம் இறைவனுக்குள்ள பிரேமையை இது புலப்படுத்துகிறதல்லவா?

நாமதேவரும் ஞானதேவரும் பல தீர்த்தங்களில் நீராடி அத்தினாபுரம் என்றும் நகரினையடைந்தனர். அங்குள்ள அரசன் பெயர் சுவிந்தன். அவன் நாமதேவரைப் பார்த்து இறந்த பசுவைக்காட்டி "நீர் உண்மையான ஹரி பக்தன் ஆயின் இறந்த பசுவை உயிர்ப்பிப்பீரா? என்றான். அதற்கு நாம தேவர் சம்மதம்

தெரிவிக்கவே, எத்தனை நாளில் உயிர்ப்பிப்பீர் என்று கேட்டார் நாமதேவர் நான்கு நாட்களில் என்று பதில் கூறியதும் அரசன் அப்படி நீர் உயிர்ப்பிக்காவிடில் உம்மைக் கொல்வேன் என்று கூறினான். நாமதேவர் நான்கு நாள் தியானத்தில் அமர்ந்து இறந்த பசுவை மீண்டும் உயிர்பெறச் செய்து தனது ஹரிபக்தியை உலகறியும் படிச்செய்தருளினார். அரசன் நாம தேவரைப்பணிந்து போற்றித்துதித்தான். நாமதேவரும் ஞானதேவரும் சென்றனர். அங்கு கபிரர் என்னும் பக்தர் வீட்டுக்குச் சென்றார்கள். இவர்கள் சென்ற நேரம் பகற்பொழுது கழித்து இருள் சூழ்ந்து விட்டது. ஆயினும் தமது வீடு நோக்கி பக்தர்கள் வந்திருப்பதைக்கண்ட கபிரரின் மனைவி ஆவலுடன் வரவேற்று உட்காரும்படி உபசரித்து விட்டு அவருக்கு உணவளிக்க வீட்டில் எதுவும் இல்லாததினாலும், கணவன் வீட்டில் இல்லாததினாலும் உணவு அரிசி, காய்கறி பருப்பு முதலானவற்றை வாங்கிவரப் புறப்பட்டுச் சென்றாள். இருட்டிவிட்டதினால் கடைகள் யாவும் அடைத்து விட்டனர். ஆகவே அவ்வூரிலுள்ள ஒரு வணிகனிடம் சென்று வேண்டிய பொருட்களைத் தருமாறு கேட்க; கெட்ட நோக்கங் கொண்ட அவ்வணிகன் அம் மாதரசியின் வறுமையையும் இளமையையும் பார்த்து "நீ எனது ஆசைக்கு இணங்குவாயானால் உனக்கு சமையல் பொருள்களைத் தருவேன்" என்று நிபந்தனை போட்டான். பாகவதருக்கு விருந்துபடைத்தலே உயர்ந்த தருமம் எனவும் அதுக்காக உடல் பொருள் ஆவி அனைத்தையுமே தியாகம் செய்வதாயினும் பரவாயில்லை. "பாகவதருக்கு உணவு அளித்து உபசரித்தபின் உமது ஆசைக்கு இணங்க வருவேன் இப்போது போகவிடும்" என்று வாக்குறுதி தந்துவிட்டு சமையல் பொருட்களுடன் வீடு சென்று அவசரமாகச் சமையலை முடித்து பாகவதர்கள் இருவருக்கும் உணவு படைத்து உபசரித்தாள். அப்போது அவரது கணவன் கபிரர் வீடுதிரும்பினார். அவரிடம் நடந்தவற்றைக் கூறினாள். அவர் அவளைப் புகழ்ந்து, இப்படியான ஒரு மனைவி வாய்த்ததை எண்ணிப் பெருமாளைத் துதித்துப் போற்றி அவளை அழைத்துக்கொண்டு வணிகன் வீட்டுக்குச் சென்று வெளியே காத்திருந்தான். மனைவி உள்ளே சென்று வணிகனிடம், உமக்குக் கொடுத்த வாக்குப்படியே எனது கணவர் என்னை அழைத்து வந்து ஒப்படைத்திருக்கிறார். நீர் உமது எண்ணத்தைப் பூர்த்தி செய்யலாம் என்றாள். அவளது வார்த்தையைக் கேட்டதும் ஞானோதயம் வரப்பெற்ற வணிகன்.

அவளைப்பணிந்து போற்றி அவள் ஒரு தெய்வம் என்று கொண்டாடி வேண்டிய பொருள்களையெல்லாம் வாரி வழங்கி கபிரருக்கும் மனைவிக்கும் தொண்டனானான்.

அங்கிருந்து ஞானதேவரும் நாமதேவரும் புறப்பட்டு மார்வாட தேசம் சென்றனர். வழியில் ஒரு கிணற்றில் தண்ணீர் இருப்பதைப்பார்த்து தாகசாந்தி செய்வதற்கு வாளி இல்லாததினால் பெருமாளை எண்ணித்துதித்தனர். இறைவன் திருவருளினால் அடிக்கிணற்றினுள் இருந்த தண்ணீர் மேல்மட்டத்திற்கு வழிந்தோடியது. இருவரும் வயிறார நீர் அருந்தி தாகந்தீர்த்தனர்.

பின்னர் நாகேசுவரம் சென்று ஹரிநாம பஜனை செய்தனர். இவர்களைப் பார்த்த அந்தணர்கள் நீவீர் இருவரும் சூத்திரர்கள்! ஆகவே நாங்கள் வேதமந்திரம் சொல்லும் இடத்தை விட்டு அப்பாலே போய் நின்று பஜனை செய்யுங்கள் என்று வேறு திசைக்கு அப்புறப் படுத்தினார்கள். அவர்கள் வேறு பக்கம் போய் ஹரி பஜனை செய்ததும் சுவாமி அந்தப்பக்கம் முகத்தைத் திருப்பிச் செவிமடுத்ததை அந்தணர்கள் கண்டு வியப்புற்று அவர்களிடம் மன்னிப்பு கேட்டுத் தொழுதனர். கலியுகத்தின் நாமபஜனை மிகச்சிறந்தது என்று புலனாகின்றது.

நாமதேவரும் ஞானதேவரும் திர்த்த யாத்திரை முடித்துப் பண்டரிப்புரம் வந்து பெருமாளைத் தரிசனம் செய்தார். பெருமாள் ஆனந்தத்துடன் நாமதேவருக்குத் துளபமாலை அணிவித்து தண்ணீர்மாற்றி மலர்மகளிடம், நாமதேவன் தீர்த்த யாத்திரை விரதம் முடித்து வந்துவிட்டான். அந்தணருக்கு உணவுப்பரியாற வேண்டிய ஏற்பாடுகளைத் தயார் செய் என்று கட்டளையிட்டருளினார். உடனே மகாலட்சுமித் தாயாரும் அட்டசித்திகளையும் அழைத்து அறுசுவையுணவு கனப் பொழுதில் தயாரித்து விட்டாள். சுவாமி அந்தணர் வடிவில் சந்திரபாகை தீர்த்தக் குளக்கரையில் அமர்ந்திருந்த வேதியர் கூட்டத்திற்குள்போய் நின்று நாமதேவன் விரத பூர்த்திக்கு உணவுவழங்குகிறான். அந்தணர்கள் எல்லோரும் வாருங்கள்! வாருங்கள்! என்று அழைத்து விட்டு அவர்கள் வருவதற்கு முன் கோவிலுக்குள் வந்து புகுந்து மறைந்து விட்டார். நாமதேவனும் ஸ்நானம் செய்து மந்திரமோதி அந்தணர்களுக்கு வயிறார உணவுபடைத்தனர். பின்பு சூத்திரனாக வந்த

பெருமாளுடன் கூட அமர்ந்து உணவு உண்ண முற்பட்டார். இதனைக் கண்ட அந்தணர் ஆத்திரத்துடன், நீர் சூத்திரனுடன் உட்கார்ந்து சமபந்திபோசனம் செய்யும் பாவி. ஆகவே சந்திரப்பாகையில் நீராடிப் பரிகாரங்கள் செய்த பின்பு தட்சிணை வழங்குமெனக்கூறினார். அவ்வாறு செய்தபின்பு சில அந்தணர்களுக்குப் பெருமான் தானே உணவு பரிமாற, அதனைப்பார்த்து அவர்கள் 'சூத்திரன், எமக்குப் பரிமாறத் தொடங்கிவிட்டான் இது என்ன அநியாயம்' என்று கூறி அருவருத்தனர். உடனே பெருமாள் தனது சூத்திர வடிவினை மாற்றி சுய ரூபத்தைக்காட்டினர். உடனே அந்தணர் எல்லோரும் மனம் வருந்தித் தொழுது மன்றாடினார்கள். அப்போது பெருமாள் ஞான தேவனைப் பார்த்து இந்த அந்தணர்களுக்கெல்லாம் உபதேசம் செய்க எனக் கட்டளையிட்டருளினார். சிலகாலம் சென்ற பின் ஞானதேவர் தனக்கு இவ்வுலகீ வாழ்வுபோதும், சமாதி அருள வேண்டும் என்று இறைவனிடம் வேண்டினார். உடனே பகவான் பாகவதர்களையெல்லாம் வரச் சொல்லிக் கனவில் அருள் புரிந்து கார்த்திகை மாதம் கிருஷ்ணபட்சத்தில் திருவோன நட்சத்திரத்திலன்று இந்திராயணிக்கரையில் இயலளிந்தி என்னும் ஊரில் சித்தேஸ்வரன் கோயிலுக்கு ஞானதேவர் விரும்பிய படியே சமாதியிருக்க அருள்புரிந்தார். இறைவனிடம் ஞான தேவர் கலந்து இன்பமுற்றார். ஞானதேவரின் மூத்த சகோதரர் நிவிர்த்தி தேவர் திரியம்பகம் என்னும் தலத்திலும் சோபானுதேவர், ஒருவருடங்கழித்து வேறு தலத்திலும் சமாதியெய்தினார்கள்.

*"ராதே கிருஷ்ணா"*

✤ ✤ ✤ ✤

# சாங்க தேவரும் ஞான தேவரும்

பிரம்மா தேவரது ஒரு பகலில் ஒரு யாமத்தில் பதினாலு இந்திரர்கள் தோன்றினர். அவர்களில் ஒருவர், நாரத முனிவரைப் பார்த்து, சுவாமி எனது பாசம் நீங்கி முத்தி பெறுவதற்கு என்ன வழி? தாங்கள் தான் உபதேசம் செய்து அருள வேண்டும் என்று கேட்டான். அதற்கு நாரதர் "புண்ணியஸ்தலமாகிய பண்டாரிபுரத்தில் நீ பிறப்பாய். அப்பொழுது உனக்கு நற்கதி கிடைக்கும் என்று ஞான உபதேசம் செய்தருளினார். அதன்படி பண்டாரிப்புரத்தில் ஒரு பிராமணத் தம்பதிகளுக்கு புத்திரனாக பிறந்தான். இவனது பெற்றோர்கள் சாங்கன் என்று அக்குழந்தைக்குப் பெயரிட்டு வளர்த்து வந்தனர். உரிய வயதில் உபநயனம் என்னும் பூநூல் தரிக்கும் சடங்கு நிகழ்த்தினர். சாங்கன் அட்டாங்க யோகங்களையும் அறிந்து அனுஷ்டித்து அதன் பயனாக மூப்பு நரை முதலின உண்டாகாது ஆயிரத்து நாநூறு ஆண்டு காலம் வாழ்ந்து வரலானார். அவருக்கு ஆயிரத்து நானூற்று சீடர்கள் இருந்தார்கள். இதனால் அவர் ஆணவம் கொண்டு தனக்கு நிகரானவர் எவரும் இல்லையெனக்கர்வம் கொண்டிருந்தார். அப்பொழுது பெருமான் அசரீரியாக, "சாங்கனே உனது ஆணவத்தை அடக்கும் தத்துவ ஞானி அழகாபுரியில் வாழ்கின்றான். போய்க்காண்" என்று வான் ஒலியாகக் கட்டளையிட்டருளினார். இதனைக் கேட்ட சாங்கர் அவரிடம் போவதற்காக முதலில் ஒரு கடிதம் எழுத நினைத்தார். ஒரு காகிதத்தை கையில் எடுத்து, முதலில் எப்படி ஆரம்பிப்பது எனச்சிந்தித்தார். இவர் ஆயிரத்து நாநூறு ஆண்டு வாழ்ந்தவர். ஆகவே "ஆசீர்வாதம்" என்று எழுதினால் பின்பு அவரிடத்தில் எப்படி சீடனாக சென்று உபதேசம் பெற முடியும். அது தகாது. "தேவரீர்" என்று ஆரம்பித்தால் அவர் மூத்தோர் ஆகுதல் அவசியம் என்று பலவாறாக சிந்தித்து மனக்குழப்பம் அடைந்தவராக; வெறுங் காகிதத்தை மட்டும் தனது சீடன் ஒருவனிடம் கொடுத்து அனுப்பினான். அவரது சீடன் வான்வழியே பறந்து சென்று அழகாபுரியில் இதை ஞான தேவரிடத்தில் கொடுத்தான். சீடன் வான்வழி பறந்து வந்து இறங்கிய உடனேயே; இவனைப் பார்த்து இது சாங்கர் கொடுத்தது தானே? என்று

வினாவிய படியே காகிதத்தை கையில் வாங்கிப்பார்த்தார். மாணாக்கனுக்கு ஒரே ஆச்சரியம். ஞான தேவர் அக்கடிதத்தில் "ஆயிரத்திநூறு ஆண்டுகளும் வெறுமையாய்க் கழிந்தது என்பதனை இந்த வெறுங் கடிதம் உணர்த்துகின்றது. சுத்த சைதன்யம் என்பதில் பெரிது என்றும் சிறிது என்றும் பேதம் கிடையாது இதை உணராததே இளையது, மூத்தது என்பதைப்பற்றி சிந்தித்து எதுவும் குறிப்பிடாது விட்டது போலும்" என்று எழுதி தூதனாக வந்த மாணாக்கனிடம் கொடுத்து அனுப்பினார். கடிதத்தைப் பார்த்ததும் சாங்கரின் கர்வம் யாவும் மறைந்தது. தன்னைப்பற்றி இவ்வளவு விஷயங்களையும் அறிந்து எழுதியனுப்பியவர் உண்மையிலேயே பெரிய மகானாக தான் இருக்கவேண்டும் என்று அவர் மீது பெரு மதிப்பும் மரியாதையும் வைத்து அவரிடத்துச் செல்ல விரும்பினார். உடனே தனது யோக சக்தியினால் ஒரு புலியை வரவழைத்து அதன்மீது ஏறி சீடர்களுடன் புறப்பட்டுப்போனார். இவர் புலியின் மீது அமர்ந்து வருவதையறிந்த ஞானதேவர். ஒரு மதிற் சுவர் மீது ஏறியிருந்து அந்தச் சுவரையே நடக்க வைத்து இவரை எதிர்கொண்டு வரவேற்றார். இதனைக் கண்ட சாங்கர் ஞானதேவர் தம்மை ஆட்கொள்ள வந்த தேசிகமூர்த்தம் என்பதை சந்தேகமற தெளிந்து அவரை வணங்கித் துதித்தார். ஞானதேவர் அவருக்கு ஞான உபதேசம் செய்தருளினார். பின்பு சாங்கதேவர் பண்டரிபுரம்சென்று சந்திரபாகை தீர்த்தக்கரையில் தவநிலையில் இருந்தார். ஒரு நாள் நடுராத்திரியில் குருபஹவான் இவரது கையைப்பிடித்து நடு ஆற்றுக்குள் அழைத்துச் சென்றார். அங்கு அழகிய நவரத்தின மணிகளால் உருவாக்கப்பட்ட கண்ணைப் பறிக்கும் பிரகாசத்துடன் சிம்மாசனத்தின் மீது பூதேவி ஸ்ரீதேவியருடன் ஸ்ரீமன் நாராயணப் பெருமான் அமர்ந்திருக்கும் காட்சியினைக் கண்டு பரவசமாகி நின்றார். அப்பொழுது, சுவாமி சாங்கதேவனைப் பார்த்து "உனக்கு என்ன வரம் வேண்டும்? எனக் கேட்க; சாங்கர் வணங்கி சுவாமி! தங்கள் திருவடி மீது நீங்காத அன்பு வேண்டும் என்று கேட்டார். பெருமாள் மகிழ்ந்து திருவருள் நல்கினார்.

அதன் பின்பு சாங்கதேவர் கோதாவரிநதிக்கரையில் புண்ணியத்தம்பம் என்னும் ஊரில் ஒரு மடம் கட்டுவித்து அதில் "சாளக்கிராமம்" நிறுவி அங்கு நாராயணனைப் பூசித்து வரலானார்.

## தேவரின் அற்புதங்கள்

இவ்வாறிருக்க சங்கரன் என்னும் பெயர் கொண்ட ஒரு அந்தணன். கல்யாணமான சில தினங்களில் இறந்து விட்டான். கணவனை இழந்த இளம் விதவையை அழைத்துக் கொண்டு அவளது மாமியாராகிய சங்கரின் தாயார், சங்கரனது உடலை எரித்த அஸ்த்தியையும் கொண்டு காசிக்குப் புறப்பட்டு சென்றனர். வழியில் சாங்கருடைய திருமடத்தைப் பார்த்ததும் உள்ளே சென்று சாங்கதேவரைப் பணிந்தனர். சாங்கதேவர் அந்த இளம்மனைவியைப்பார்த்து 'சற்புத்திரன் உண்டாகுக" என்று ஆசீர்வதித்தார். இதனைக் கேட்ட மாமியார் தனது மருமகளின் விதவாநிலையை விளக்கிக் கூறி வருந்தினாள். அதற்கு சாங்கதேவர் கவலைப்படாதே! அந்தப் பெருமாள் எனது வாக்கில் நின்று ஆசீர்வதித்தது பொய்யாகாது. பெண்ணே! நீ உனது கணவனின் அஸ்தியை விடும் தீர்த்தத்தை அருந்துவாயாக! உனது குலம் விளங்க புத்திரன் பிறப்பான் என்றார். அதன்படி தனது கணவனது எலும்பை விட்டகங்கா ஜலத்தை பிரசாதமாக அருந்தினாள். அவள் கருவடைந்து அழகான ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தாள். அயினும் கணவனையிழந்த பின் விதவை பெற்ற பிள்ளை என்று ஊரார் பழித்துரைத்தனர். அந்தச் சிறுவன் ஏழுவயதானது அவனுக்கு உபநயனம் செய்ய வேதியரை அழைக்க, அவர்கள் அனைவரும் ஒருங்க சோந்து விதவையின் மகனுக்கு அவனுக்கு உபநயனம் செய்யமாட்டோம் என்று மறுத்து விட்டனர். இதனைக் கண்டு பெருங்கவலை கொண்டதாயார் சாங்கா் தேவரிடம் கூறினார். சாங்கா வைதிக அந்தணர்களிடம் "இக்குழந்தை பெருமாள் கருணையினால் பிறந்த அற்புதக் குழந்தை ஆகவே நீங்கள் மறுப்பது கூடாது" என்று கூறினார். அதற்கு அந்த வேதியர்கள் அப்படியானால் அந்தப் பெருமாள் இவ்விடம் வருவாரோ? என்று கேட்க, சாங்கதேவர் " ஆம் நிச்சயம் வருவார்" என்றனர். உடனே சில அந்தணர்கள் கோவிலில் இருந்த பெருமாளைக் காணவில்லை என்று அலறித்துடித்து வந்து கூறினார்கள். அதனைக் கேட்ட வேதியர்கள் வியப்பும் பயமும் அடைந்தனர். அவ்வேளையில் பெருமாள் அவர்களுக்கு தமது திவ்விய தரிசனத்தை நல்கினார். வேதியரும் மிகவும் பாக்கியசாலிகள் ஆனோம் என்று ஆனந்தமுடன் அந்தச்சிறுவனுக்கு உபநயனச் சடங்கை செய்து முடித்தனர்.

## மாதவரும் - யாதவரும்

இதன் பின்பு ஆண்டவன் கட்டளைப்படி சாங்கதேவர் துவாரகைக்குப் புறப்பட்டு கண்ணைத் தரிசனம் செய்யும் நோக்குடன் செல்லலானர் வழியில் இவரது வருகையை அறிந்து யாதவகுல பண்டிதர் ஒருவர், சாங்கதேவரது அருளையும் அற்புதங்களையும் தெரிந்து அவர்மீது பெருமதிப்பு வைத்து அவலை தரிசித்து வணங்கினார். தனது மனைவி கர்ப்பிணியாக இருப்பதையும், அவள் உதவியின்றி தனித்திருப்பதையுங் கூட மறந்து சாங்கரின் பின்னே சென்ற விட்டார். யாதவ பண்டிதரின் மனைவிக்கு சில நாளில் பிரசவ வலி உண்டாகித்துடித்தாள். அவள் பெருமாளை நினைத்து சுவாமி எனக்கு யாரும் உதவியில்லையே எனது கணவரும் சாங்கரின் பின்னே சென்று விட்டார். இப்போது எனக்கு சாங்கதேவரைத் தவிர வேறு யார்தான் உதவுவார்கள் என்று பலவாறாக அழுது புலம்பினாள். இதனைக்கேட்ட பெருமாள் தனது பக்தனாகிய சாங்கருக்காக ஒரு பெண்ணாக மாறி யாதவ பண்டிதர் வீட்டுக்கு வரவே, அவளைப் பார்த்து நீ யாரம்மா? என்று அந்தக் கர்ப்பிணிப் பெண் கேட்டாள். அதற்கு பெருமாள் எனது பெயர் கிருஷ்ணாபாய் உனக்கு உதவும் படி சாங்கதேவர்தான் அனுப்பிவைத்தார் என்று கூறி, தனது அருளால் அங்கு சகலவசதிகளுடன் பிரசவத்திகேற்ற ஒரு மனையை அமைத்து அதில் அவளை அழைத்துச் சென்று,ஆவன செய்து குழந்தைப்பேறு பார்த்து மற்றும் வீட்டு வேலைகளை செய்து கொண்டிருந்தார்.

துவாரகைக்கு பாதயாத்திரையாகச் சென்றடைந்த சாங்கதேவர் கண்மூடிசுவாமி தரிசனம் செய்யும் போது அங்கு பெருமாள் இல்லை யென்பதையும் அவர் யாதவ பண்டிதர் வீடு சென்றிருப்பதனையும் அறிந்தார். உடனே மீண்டு திரும்பிவந்து யாதவப் பண்டிதர் வீடு சென்றார். அலகு வாசலில் பெருக்கிக் கொண்டிருந்த பெண்மணி தன்னை வணங்கியதையும் கவனியாது உள்ளேபோய் பண்டிதர் மனைவியையும் குழந்தையையும் பார்த்து மகிழ்ந்தார். அப்போது அவள் குழந்தையை சாங்கரின் திருவடிகளில் கிடத்தி நமஸ்கரித்து சுவாமி தங்கள் கட்டளைப்படி தாங்கள் அனுப்பி வைத்த கிருஷ்ணனாய் உரிய சமயத்தில் வந்து என்னைப் பராமரித்து குழந்தைப் பேறு செய்வித்து குழந்தையும் கவனித்து சகல அலுவல்களையும் பார்க்கின்றார் என்று கூறினாள். சாங்கர் ஆவலுடன் நீ பெரும் புண்ணியவதி அந்தப் பெருமாள்

தான் உன்னை வந்து ரட்சித்திருக்கின்றார். கிருஷ்ணாபாய் எங்கே? என்று கேட்டபடி வெளியே வந்து பார்க்கையில் இதுவரை அங்கிருந்த கிருஷ்ணாபாய் திடீரென மாயமாக மறைந்த விட்டாள். தேவரும் – பண்டிதர் மனைவியும் கண்ணனின் கருணையை விதந்து புளகாங்கிதம் அடைந்து அவனைப் பாடிப் பரவினர். பின்னர் சாங்கதேவர் அவளையும் குழந்தையையும் துவாரகைக்கு அழைத்துச் சென்று சுவாமி தரிசனம் செய்வித்து அங்கு ஹரிபஜனம் செய்து கொண்டிருந்த யாதவ பண்டிதரிடம் மனைவியையும் குழந்தையையும் ஒப்படைத்து ஆசீர்வதித்து அவ்விடம் விட்டு நீங்கினார்.

## நாயும் லிங்கமும்

அங்கிருந்து பெருமாள் கட்டளைப்படி (பேதலி) நகரம் நோக்கி செல்வாராயினார் வழியில் ஒரு நகரத்தில் மல்லிகார்சுனன் என்று ஒரு சிவலிங்கத்தாராகிய மந்திரமாயாவி தன்னுடைய மந்திரபலத்தினால் ஒரு ஆசனம் உண்டு பண்ணி, அவ்வழியால் வரும் ஹரி பக்தரை அதில் அமர்ந்ததும் அது வேகமாக காற்றில் சுழன்று கீழே வீழ்த்திவிடும். உடனே மாயாவி அவர்களை பார்த்து கைத்தட்டி அவமானப்படுத்தி அதிலே மகிழ்வு கொள்வான். அவன் சாங்கதேவரின் புகழைக்கேள்விப்பட்டு அவரையும் அவமானப்படுத்துவதற்காக ஒரு நாயைப்பிடித்து அதற்கு அவரது பெயரைவைத்து "சாங்கர்" என்று பெயரைக் கூறியதும் ஓடி வருவதற்குப் பயிற்சி கொடுத்து வைத்திருந்தான். சாங்கரை அவமானப்படுத்துவதற்கு தக்க சமயத்தை எதிர்பார்த்து காத்திருந்தான். அவ்வழியே சாங்கர் வருவதை அறிந்ததும் வழமைபோல ஓடிச் சென்று தாங்கள் வரவேண்டும்! வரவேண்டும்! இந்த ஆசனத்தில் அமர வேண்டும்! என்று கபடமாக உபசரித்தான். சாங்கதேவர் அந்த ஆசனத்தைப் பார்த்த மாத்திரத்திலே அது நெருப்புப் பிடித்து எரிந்த சாம்பலாகியது. இதனைக் கண்ட மல்லிகார்ச்சுனனுக்கு பயமாகப் போய் விட்டது எனினும் அவரது பெயரைக் கூவி நாயை வரவழைத்துக் காண்பித்து அவமானஞ் செய்ய வேண்டுமென எண்ணி, அங்குள்ள லிங்கதாரிகள் பலரையும் உணவருந்த உட்காரவைத்து உணவு படைத்தான். அவர்கள் தினமும் உணவு உண்ணத் தொடங்குமுன் தமது கழுத்தில் கட்டியிருக்கும் சிவலிங்கப்பேழையைத் திறந்து அங்கிருக்கும் சிவலிங்கங்களுக்கு அமுதை

நிவேதனம் செய்வது வழக்கம். அதன்பிறகே அவர்கள் உண்பார்கள். அதுபோல் அவர்கள் அனைவரும் தமது கழுத்தில் தொங்கிக்கொண்டிருந்த பேழைகளைத் திறக்கும்போது அங்கு லிங்கங்கள் யாவும் காணாமல் போயிருப்பதனைப் பார்த்து ஆச்சரியப்பட்டு, நாம் இந்த மல்லிகார்சுனனின் சொல்லைக் கேட்டு அருளாளராகிய சாங்க தேவரை மதித்து வணங்காமையினால்தான் இப்படி நேர்ந்தது என்று தெரிந்து அவரிடத்தில் மன்றாடித் தமது இஷ்டலிங்கங்களை மீளவும் பெற வேண்டும். அதற்குத் தாங்கள் தான் அருள்புரிய வேண்டும் என்று பணித்தனர். அப்போது சாங்க தேவர் மல்லிகார்சுனனைப் பார்த்து, நீங்கள் நாயை உணவு கொடுக்காமல் சிறையிலிட்டு வைத்திருப்பதனால் அது பசிபொறுக்காது லிங்கங்களையுண்டு விட்டது என்றார். அவர்கள், இப்படியும் அதிசயம் நடக்குமோ? என்று அதிசயித்து நிற்கையில் சாங்கர், நாயை வரவழைக்குபடி கூற நாயைக் கொண்டு வந்தனர். அதனைத் தமது திருக் கண்களினால் நோக்கம் செய்து நாயே! சிவலிங்கங்களைக் கக்குவாயாக! என்று சாங்கர் கூறியதும் அந்த நாய் ஐநூறு லிங்கங்களைக் கக்கியது. அவர்கள் அனைவரும் தமது சிவலிங்கங்களை ஆவலுடன் தேடி எடுத்துப் பார்த்து மகிழ்ந்து தேவரைப் பணிந்தார்கள். மல்லிகார்சுனன் அவமானமடைந்து சாங்கதேவரைப் பணிந்து போற்றினான். தேவர் அனைவருக்கும் அருளாசி நல்கினார்.

## இறந்தவள் பிழைத்த அதிசயம்

அங்கு சிறிது நேரம் தங்கியிருக்கும்போது ஹரிபத்தனாகிய ஒரு வேதியன் ஓடிவந்து சுவாமி இவ்வூர் அரசன் ஒரு துருக்கன். அவனுக்கு ஹரி பஜனம் செய்பவர்களைக் கண்டால் பிடிக்காது. தாங்கள் வந்திருப்பதை அறிந்தால் தங்களை வருத்திக் கொடுமை செய்வான். உடனே தாங்கள் வேறு ஊருக்குச் சென்றுவிடுவது நலம் என்று கூறினான். மேலும் அவனது மனைவி பாம்புகடித்து இறந்ததினால் இன்று அவன் வரமாட்டான் என்றும் தெரிவித்தான். உடனே சாங்கதேவர் நீ போய் அரசனது மனைவியை உயிர் பிழைக்க வைத்துத் தரமுடியும் என்றும் விரும்பினால் அரண்மனைக்கு என்னை அழைத்துச் செல்லும்படியும் தெரிவித்து வருமாறு அனுப்பினார். அவன் போய்த் தெரிவித்ததும் அரசன் உடனே அவரை அழைத்து வரும்படியாக ஆட்களை

அனுப்பி வைத்தான். அங்கு சென்றதும் தேவர் திருமால் நாமத்தை உச்சரித்த வண்ணம் அரசனிட்ட ஆசனத்தில் அமர்ந்ததும் அரசன் அவரைப் பார்த்து "எனது மனைவியைப் பாம்பு கடித்து இறந்து நான்கு நாட்களாகி விட்டன. எவ்வளவு முயன்றும் அவளைக் காப்பாற்ற முடியவில்லை" என்று கூறி வருந்தினான். சங்கதேவர் ஒரு துளசித் தளத்தை அவனிடம் கொடுத்து அதனைப் பிணத்தின் மீது வைக்கும்படி கூறினார். அரசன் அதனைக் கொண்டு போய் வைத்ததும் அவள் தூங்கி எழுபவள்போல, உயிர் பெற்று எழுந்தாள். அரசன் ஆனந்தத்துடன் அவளுடன் பேசமுற்படுகையில் அவள் பேசாதிருந்தாள். அரசன் கவலையுடன் மீண்டும் தேவரிடம் ஓடோடி வந்து தெரிவிக்க, தேவர் அரசனிடம் "நீர்போய் அவளிடம் என்ன செய்தால் நீ என்னுடன் பேசுவாய்? என்று கேட்குமாறு அனுப்பினார். அரசன் அவளிடம்போய் என்ன செய்ய வேண்டும்? என்று வினாவியதும் அவள் "என்னைப் பிழைக்க வைத்தோரிடம் நாம் சரணாகதி அடைய வேண்டும்" என்றார். உடனே அரசனும் மனைவியும் ஓடி வந்து தேவர் பாதத்தில் வீழ்ந்து வணங்கினர். அவர் அரசனைப் பார்த்து உனது ஆட்சியில் தேவாலயங்கள் வேதியர்கள், பசுக்கள், பாகவதர்கள் அனைவரும் மனம் வருந்தாது நீதியுடன் பரிபாலனம் செய்து வருவாயாக! என்று வாழ்த்திச் சென்றார். அரசனும் அவ்விதமே வாழ்ந்து வந்தான். சாங்கதேவர் பண்டரியடைந்து பெருமாளை வேண்டி ஆனி–பூர்வசப்தமியில் அரசடியில் சமாதி எய்தினார்.

☆ ☆ ☆

உ

# விநாயகர் துதி



திருவாக்குஞ் செய்கருமங் கைகூட்டுஞ் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் – உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனைமு கத்தானைக்
காதலாற் கூப்புவர்தம் கை.



# ஸ்ரீ நாராயண கவசம்

## ஸ்தோத்திரம்

பூதேவி ஸ்ரீதேவி புடைசூழ் வானைப்
பூத்தமலர்க் கண்ணானைப் புனிதன் தன்னை
மாதேவர் போற்றுகின்ற மாணிக்கத்தை
மாண்புக்கும் மாண்பாக (திரு) மாலை நாளும்
தீதேதும் வாராமற் காக்க வென்றே
தெரிந்தோது நெஞ்சமே தீமை யில்லை
ஆதாரம் அவனென்றே எண்ணி ஆங்கே
ஆதி நீ காவா என்றழைத்த யானை
வாகன வாழ்வுறவும் முதலை சாக
வட்டாழி எறிந்தானைக்கருடன்மீதில்
தோதாக அமர்ந்தானைக் கதையில் பாணம்
தொல்லாலழி சங்கொடு கத்தி பாசம்
கேடயமே படைகொண்ட கேசவன்தான்
கிள்ளிவிடும் பகையெல்லாம் உணர்த்தி உண்மை
ஆடகப்பொன் அவனன்றோ அவனே காப்பான்
அம்புயத்தாள் உனைக்காக்கும் கவசம்தானே (1)

பாலாழி பள்ளிக்கொண்ட பரமன் மீனாய்
பண்டேதான் அவதரித்து புவனம் காத்தான்
சேலொடு முதலைகளும் வாழும் நீரில்
செந்தாமரைக் கண்ணன் வந்தே காக்க
மாலேதான் வாமனனாய் மாயை செய்தான்
மண்ணளந்தான் விண்ணளந்தான் ககனம் மீதில்
தானேதான் தந்தெனையே காக்க கண்ணன்
தண்ணளியே தாங்கியெனைக் காக்க மாதோ. (2)

தூணதனில் நாரணனும் உள்ளானோதான்
துஷ்டனே நீமகனா? என்றே கேட்டு
தூணினையே உதைத்தானைக் கொல்லவென்றே
தூய நரசிங்கத்தின் வடிவம் கொண்டான்
பாணமெதுவும் இல்லாதே பகையை வென்றான்
பயங்கரமாய் நகைத்திட்டான் இடியே போல
ஆணியவன் உலகினுக்கு ஆனதாலே
அண்ட பகிரண்டமுடன் அலறிற்றம்மா
நாணினரே அவுணரினம் பிரகலாதன்
பூரணனே நாரணனே காக்க காக்க
காணுவிழிக் காட்சியுமாய் நிறைவாய் நின்ற
காரணைக் கருணைதரு கண்ணை மண்ணில்
தாமரைத்தாள் என்றென்றும் காக்க காக்க. (3)

யாகமதன் வடிவானான் வராக மூர்த்தி
போகமதைத் தரும பூமி தன்னைக் கொண்ட
வேகமத ஹிரண்யாக்ஷன் தன்னைக் கொன்றே
ஆகமதில் தன்வக்ர தம்ஷ்ரப் பல்லில்
வாகாக நிறுத்தியவர் வழியில் காக்க
நாகமதன் சிகரத்தில் பரசுராமன்
நோகாது காத்திடுக காக்க ராமன்
தேகத்தைத் தேசமெல்லாம் செல்லும் போதே (4)

மந்திரத்தால் ஏவுதலால் நிகழும் துன்பம்
மறதியினும் மறவாது மாலே காக்க
எந்தவொரு நிலையினிலும் கர்வம் என்னை
ஈர்க்காத வண்ணமெனை நானே காக்க
முத்துமறை முக்குணத்தான் யோகத் தாதி
முன்னவனாம் ஸித்தகணம் காக்கும் ஈசன்
முந்தியொரு கபிலவவதாரன் எந்தன்
மூண்ட வினைக் கட்டறுத்துக் காக்க காக்க. (5)

மன்மதனின் கணையினின்றும் சனத்குமாரர்
மகிமையுடன் காத்திடுக காக்க வென்னை
விண்ணுலகின் தேவதைகள் குற்றம் நீக்கி
விரைந்தவருள் ஸ்ரீஹயக்கிரீவர் தாமும்
கண்ணனது வழிபாட்டில் குற்றம் இன்றி
கவினார்ந்தநாரதமா முனிவர் காக்க
நண்ணுகிற நரகநிலை துன்பம் எல்லாம்
நயந்தருளும் கூர்மந்தான் காக்க காக்க. (6)

உண்ணுகிற அன்னத்தின் பின்னம் நீக்கி
உயர்வருளும் தன்வந்த்ரி உவந்து காக்க
திண்மையுடன் நான் வாழ வெப்பம் தட்பம்
தீண்டியெனை வருத்தாது ரிஷபர் காக்க
மண்ணிலுறு வீண் அபவாதம் நீக்க
மாயஜ்ஞர் மாதவரே காக்க காக்க
கண்ணிய மில் மனிதரிடம் பலராமன் தான்
கடுவரவுக் கூட்டத்தில் சேஷன் காக்க. (7)

மோகத்தை உண்டாக்கும் மதங்கள் தன்னில்
முழுதான பிரவாகம் நீக்கி என்னை
வேகமுடன் ஞானமருள் வியாசர் காக்க
விழுதான அழுக்கினின்றும் பாவம் நீக்கி
வேகமுடன் இவுளிதனில் இனிமேல் தோன்றும்
விஷ்ணுவுடை கல்கியவ தாரம் காக்க
ஆகாயமும் உயிராக ஆன எம்மான்
அருள் வள்ளல் நாரணனே என்றும் காக்க. (8)

அழல்கொண்ட கதைக்கொண்ட கேசவன்தான்
அதிகாலை நேரத்தில் காக்க காக்க
நிழல் கொண்ட கோவிந்தன் அறுநாழி
புலர்காலைப் பொழுதினிலே காக்க சக்தி
அழல் கொண்ட நாராயணார் பன்னிரண்டு
அதுவென்ற நாழிகைகள் காக்க ஆழி
வலங்கொண்ட விஷ்ணு மதியம் காக்க
வலம்தரவே ஸ்ரீஹரியென் மதியம் காக்க. (9)

மதுவென்ற அரக்கனுயிர் அழித்த வில்லை
மதுகையுடன் கொண்டமது சூதனன்தான்
கதிநின்ற ஈரொன்பான் நாழி காக்க
கலங்காத யோகியரின் இதயம் இன்னும்
துதி நின்று புடைசூழும் பாலின் ஆழி
தொழவரிய சூரியனில் ஒளியாய் வாழும்
மதிமுகவன் மாலவனே சாயங்காலம்
மயங்காமல் எனைக்காக்க காக்க இன்றும்
கதிரொன்றிக் குடதிசையில் மறையும் வேளை
ரிஷி கேசன் கேசவனே காக்க காக்க
பதியென்ற பத்மநாபன் இரவின் மத்தி
பலமாகக் காத்திடுக என்னை மண்ணின்
நதியென்ற நிமலனவன் நாரணன்தான்
நீள்புகழின் பதம் தந்து காக்க காக்க.
நதியென்ற கங்கையெனக் காக்க காக்க
நால்வேத மறைமுடியே நயந்து காக்க (10)

ஸ்ரீவத்ஸ மார்புடையான் லக்ஷ்மி நாதன்
பின்னிரவில் காத்திடுக என்னைக் காக்க
ஓர்கத்தி தான் தரித்த ஜனார்த்தனனும்
உதயத்தில் காத்திடுக சந்தி தன்னில்
சீர்த்தியுடை ஸ்ரீதரன்தா மோதரன்தான்
சிறப்பாக காத்திடுக காலை வேளை
நேர்த்தியுடன் எனை விஸ்வேஸ்வரனே காக்க
நிமலானங்கள் நாரணன்தான் நிதமும் காக்க. (11)

ஊழியிடி போன்றமுனை உடைய ஆழி
உடையவனால் உரிமையுடன் ஏவும்போதே
பாழடைந்து நாற்றிசையும் சரியச் செந்தீப்
பற்றுமொரு வைக்கோற்போர் எரிதல் போல
வேழமென வரு சத்ருக் கூட்டம் எல்லாம்
விலகவழல் பட்டுருக வெற்றி நல்க
ஆழியுறை மாதவன்தான் அமுதம் காத்த
அங்கைமலர் அபயம் எனைக் காக்க காக். (12)

கேசவனின் வெல்படையே கதையே உன்போல்
நேசமுடை ஒருவன் நான் நினைக்க இன்னும்
தேசுடைய தீக்கொண்டாய் மேனி தன்னில்
திருமாலின் திருவடியே எண்ணும் என்னைக்
கூஷ்மாண்ட வைநாக தேவ குற்றம்
தீண்டாது காத்திடுக அரக்கர் யட்சர்
பேசரிய பூதகணம் வாட்டும் போதே
பின்னமிலா வண்ணமெனைக் காக்க காக்க. (13)

பொங்கு கடற்பரம்பரையான் கொண்ட சங்கே
புரிந்திட்டாய் போர் முனையில் விந்தை விந்தை
தங்கு முகில் இதழ் பதித்து ஊதும் போதே
தரை நடுங்கப் பகை நடுங்க நடுங்காத் தேவர்
எங்கணுமே கரங்குவித்து வணங்கச் செய்தாய்
இது உனக்கு அரிதில்லை அரிகைக் கொண்டான்
பொங்கிவரும் ராட்சதர்கள் குருவின் சாபம்
பூதமொடு பிசாசங்கள் தீக்கோட் பார்வை
எங்குலத்தும் பலவினைகள் எல்லாம் நீக்கி
இடர் நீக்கிக் காத்திடுக கருணையாலே
பொங்கு மெழில் வெண்சங்கே கரிய செம்மல்
புரிவதெல்லாம் அறியாத புதுமையோதான்
நங்குலத்துப் பெருமையது பக்திதானே
நயந்திட்டேன் நாராயணன்தாள் அதனால் நீயும்
எங்கணுமே உடனிருந்து இடரை நீக்கி
என்றென்றும் காப்பனென்று ஊதாய் சங்கே. (14)

கூர்ந்தநல் லறிவோர் நாப்போல்
கூர்ந்தநற் கத்தியே நீ
தேர்ந்தநல் மாதவனின் திண்புயத்
தடைந்தாய் உன்னைத்
தேர்ந்தவன் செலுத்தும் போதே
தெவ்வரைச் செருவில் வெட்டு
நேர்ந்தன முன்னம் கண்டோம்
நிகழ்வன பின்னும் காண்போம்
ஆர்த்த நல் மணியின் மாலை
அச்சுதன் பகையைச் சாய்க்க
நேர்ந்த கேடயமே நீயோ
நிலாவொரு ஆயிரந்தான்
ஆர்ந்தனை புள்ளியாக
அழகொளி விளக்கமானாய்
தீர்ந்திடப் பகைவர் கண்கள்
தீய்த்திடு துவேஷம் நீக்கு. (15)

ஏமமுடன் காக்கிற கோளின் குற்றம்
எனையணுகா விதமென்றும் இனியும் அந்தத்
தூமகேதுக்களது குற்றம் பொல்லாத்
திருடர்களால் பிராணிகளால் விளையும் துன்பம்
ஆமறைகள் கொள்ளாத பாவியர் தாம்
அறிந்தெமக்குப் புரிகின்ற துன்பம் யாவும்
மாமறைகொள் மாதவன் தாள் கமனம் செய்தால்
மரித்துவிடும் நலன்சேரும் மலர்த்தாள் காக்க (16,17)

வேதத்தின் வடிவான சக்திகொண்டார்
வேதாத்மா விஸ்வேஸ்வரர் விஷயம் கற்றார்
நாதத்தின் நாயகனைச் சுமந்தே செல்லும்
நற்கருடாழ்வாரும் என்றும் காக்க
ஆபத்தில் காத்திடுக விஸ்வக்ஸேனர்
அற்புதத்தின் திருநாமம்அடியேற் காக்க
கோபத்தில் கோபாலர் என்னைக் காக்க
குன்றாத வளமருளும் மாலே காக்க. (18)

ஐந்தான ஆயுதங்கள் நாமம் ரூபம்
அணிகின்ற ஆபரணம் அனைத்தும் என்றன்
ஐந்தான இந்திரியம் பிராணன் மூன்றை
அனுதினமும் ஆபத்தில் காக்க காக்க
செந்தூரச் செவ்வாயில் திங்கள் கொண்டான்
திருமாலாம் நாரணனே காக்க காக்க
கொற்றாரும் பூங்கழலன் பூமிநாதன்
குடிக்காகக் காத்திடுக என்னை நாளும். (19)

இயங்குவ நிலைத்தான பொருநிறைப் பொருளும்
ஆனான்
இயக்கமும் நிலையுமானான் எம்மிறை திருமால்
தானே
தியங்கிய உலகுக்கெல்லாம் திருவிளக்கவனே
சத்யம்
தினகர விழியினானை தினம் நினை நெஞ்சே நீயும்
மயங்கிட அவுணர் தம்மை மாய்த்தவன்தாளே
பற்றின்
மயக்குரு நிலையில் காப்பான் மாலவன்
சத்யம்தானே
தயங்கிடல் தேவையில்லை தளிரடி தலையில் சூடு
தாமரை மலர்கள் காக்க தாணுவே காக்க காக்க.
(20)

உலகமாய் உலகின் வேதம்
உள்ளதாய் இல்லாதானான்
உலகு கொள் மாயை நீக்க
உதித்தனன் உலகில் சத்யம்
நிலைபெற அதுவே போல
சதிப்பனென் துன்பம் தன்னை
அலையுறு நெஞ்சே சத்யம்
அப்பரம் பொருளே காப்பான். (21, 22)

பொங்குசெஞ்சடைக் கங்கையணிந்தவன் போற்றிய
நரசிம்ஹ

அங்கு உன்னகை ஆர்ப்பரிப்பினில் அண்டம்
நடுங்கியதே

எங்குமுன் குரல் தங்கிநின்றொலி தோற்றிய
நரசிம்ஹ

பொங்கு மகிழ்வினில் கங்கையேயென பக்தர்கள்
போற்றினரே

செங்கெதிர் தரும் எங்குலாம் ஒளி தோற்றது
நரசிம்ஹ

எங்குமெங்கனும் மேலும் கீழுமாய் திசையினில்
காத்திடுக

நுங்களின் புகழ் என்றும் நின்றிட நான்கு
திசைகளிலும்

தங்கிடும் உடல் உட்புறம் வெளி காத்திடு
நரசிம்ஹ (23)

ஹோமமாயிரம் செய்துயர்ந்தனை உம்பர்களின் அரசே
நாமமாயிரம் கொண்டவன் புகழ் நாரண கவசமிதை
க்ஷேமமாகவே ஜெபித்து வெல்குவை போரினில்
இந்திரனே

பூமிநாதனை நாரணன்தனைப் போற்றுக
போற்றுகவே

தாமமாய் வனம் தோளணிந்தவன் தாள்மலர்
சூடுகவே

நாமதாரியை நாரணன் புகழ் நாடொறும் கூறுகவே
ஏமமாய்த் துணை என்றவன் தொழில் இனிதெனப்
பாடுகவே

என்றும் நின்றுளான் காக்க காக்காமல் என்றவர்
பாடுகவே (24)

நாரணன்தரு கவசமிது மந்திரம் ஆனதினால்
நாள்தோறு நாடியே துதிசெய்பவரின் பார்வை
பூரணன் தரு கருணைதன்னால் பட்டிடு
மாத்திரமே
நாம்படும் பயம் நீங்கியோடுமே நாரண நாரணனே
காரணன் எனயாவும் தானெனக் காசினி கூறிடுமே
கண்மலர் அவன் கண்ணும் அவன் காட்சியும்
ஆமெனவே
நாரணன் புகழ் நாடியோதுமே நானிலம் எங்கனுமே
நன்மை நல்கிடும் நாதநின்றாள் காக்க காத்திடுக. (25)

நாராயணன் என்றவன் பெயரொடு அன்று
உருவான கவசமிதையே
நாளொடு பாடி முறையே வணங்கு
நிலையோர் பெறுவர் ஜெயமே
தீயோர்கள் திருடர் அரசாளும் மன்னர்
அவரோடு துஷ்ட மிருகம்
அறியாது செய்த அபராதம் நீக்கும்
அரிதான மாலும் காப்பான். (26)

நாராயண வர்ம துதியாகு மிதனை
நலமாக முன்னோர் பெரியோன்
நன்றாக கோத்ரம் கௌசீகமதனில்
நலமாய் வருமந்தணனே
கன்றான நெஞ்சில் நின்றே கசிந்து
கதிகாண துதி செய்ததனால்
நன்றாக யோக நிலையாலே பாலை
நிலமீது விழ்ந்திறந்தனனே. (27)

நேராக வானில் விரைவான தேரில்
கந்தர்வ ராஜன் ஒருவன்
சோராத சூழவர் புடைமாதர் சூழ
சென்றானே ககன மீதில்

நாராயணவர்ம துதிசெய்த வஸ்தி
நன்றாக அவனை ஈர்க்க
தேரொடு தலைகீழ் வீழ்ந்தானே பூமி
தெளிவாக இதனை அறிக
வேரொடு வீழ விதிசெய்த தென்னென்றா
விழைவோனைக் கண்டார் முனிவர்
நாராயணவர்ம நலமென்றுரைக்க
நன்றாக அஸ்தி தனையே
ப்ராசீரஸில் கரைத்தானே பின்னர்
தன்னாடு சென்றே யடைந்தான்
நாராயண வர்ம நலமே நலமாம்
நல்லூழியுள்ள வரையே (28,29)

பயம் வந்த போது பகை வந்த போது
பயபக்தியோடு இதனை
நலம் வந்து சேர துணைவந்து சேர
நலமாக துதி செய்தவனால்
வலம் வந்து சேர வகை வந்து சேரும்
வளநாட பயமும் அறுமே
குலம் கொண்டு வாழ குடிகொண்ட தேவன்
கோபாலன் தாளை நாடு (30)

என வன்று இந்திரன் உபதேசம் பெற்றே
இடைநின்ற சூரர் வென்றான்
இதை விஸ்வரூபம் இனிதாகக் கூறி
இணையின்றி உண்மை கண்டான்
மனமொன்றி மகவான் மூன்றான உலகும்
ஐஸ்வரியம் தன்னை அடைந்தான்
மனமொன்றி நாராயண வர்ம கவசம்
தினமெண்ணும் நெஞ்சை காக்கும். (31)

*முற்றும்*

# மொடர்ண் இந்துக் கல்சரல் ஆர்ட்ஸ் வேர்க் ஆக்கங்களும் வெளியீடுகளும்:-

1. மந்திரகுசுமாஞ்ஜலி (கிரந்தம்)

2. சிராத்தம் செய்வதன் அவசியம் (கிரந்தமும் தமிழும்)

3. தர்ப்பணத்தின் மஹிமை (கிரந்தமும் தமிழும்)

4. கண்டதும் கேட்டதும் — பாகம் 1, 2, 3, 4.

5. பயனுள்ள பயணங்கள் — 1 நாடி ஜோஸ்யம்

6. வேதமந்திரத்தில் பதம், கிரமம், ஜடை, கனம் (கிரந்தம்)

7. தெய்வீக வாழ்வு

8. லதாலிங்க மண்டலம்

9. கேதாரேஸ்வரர் (கௌரிவிரதம்) பூஜாவிதானம்.

10. இலகுவான ஔபாசன விதிமுறைகள்

11. நாமதேவரும் ஞானதேவரும்

12. முனிவர்களின் வாழ்வில் சில வரலாறுகள்

Printed by Unie Arts (Pvt) Ltd., Colombo -13. Tel: 330195.